Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk
THURSDAY, JANUARY 9, 2025

வியாழக்கிழமை, 09 ஜனவரி 2025 | ஒளி: 10 கதிர்: 133 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ FREE

# "சட்டவிரோத அகதிகள் ஒரு இலட்சம் பேர் வருவர்"

**மியன்மார் நாட்டில் இருந்து 116 பேர் சட்டவிரோதமான முறையில் இலங்கைக்குள் படகு மூலம் வருகைத் தந்துள்ளனர்**

**குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் ஊடாக உரிய வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன**

இலங்கைக்கு சட்டவிரோதமான முறையில் சுமார் 1 இலட்சம் அளவிலான அகதிகள் வருகை தருவதற்கான சாத்தியம் காணப்படுவதாகப் புலனாய்வு தகவல்கள் கிடைத்துள்ளது என தெரிவித்துள்ள பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால, நாட்டுக்கு வருகை தந்துள்ள மியன்மார் அகதிகள் 116 பேர் உண்மையில் அகதிகளாக வருகை தந்துள்ளார்களா? என்பதை உறுதிப்படுத்தியதன் பின்னரே சர்வதேச சட்டத்துக்கு அமையச் செயற்பட முடியும் எனவும் கூறியுள்ளார்

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (08) இடம்பெற்ற பல ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன், இலங்கைக்கு அகதிகளாக வருகை தந்துள்ள மியன்மார் ரோஹியங்கா முஸ்லிம் சமூகத்தினர் தொடர்பில் மனிதாபிமான அடிப்படையிலும், சர்வதேச ஒப்பந்தங்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையில் ஏற்றுக்கொண்ட பிரகடனங்கள் ஆகியவற்றுக்கு அமையச் செயற்பட வேண்டுமென வலியுறுத்தியதுடன், இந்த அகதிகள் தொடர்பில் அரசாங்கம்

தொடர்ச்சி P2






# தமிழ்மிரருக்கு இரண்டு விருதுகள்

பத்திரிகை ஆசிரியர் பேரவையும் இலங்கை பத்திரிகை நிறுவனமும் இணைந்து நடத்திய 2023 ஆம் ஆண்டுக்கான சிறந்த ஊடகவியலாளர்களுக்கான விருதுகள் வழங்கும் விழா, கல்கிஸை மவுண்லேவனியா ஹோட்டலில், செவ்வாய்க்கிழமை (07) இரவு நடைபெற்றது. 25 வது வருடமாக நடத்தப்பட்ட இந்த விழாவில் தமிழ்மிரர் இரண்டு விருதுகளை தனதாக்கிக் கொண்டது.

சிறந்த கேலிச்சித்திர விருதை நாமல்அமரசிங்க பெற்றுக்கொண்டார். சிறந்த இணையதள வடிவமைப்புக்கான சான்றிதழ், தமிழ்மிரருக்கு கிடைத்துள்ளது. எமது தமிழ்மிரரின் பயணத்தில் இணைந்திருக்கும் வாசகர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம். மேலதிக படங்கள்

முழுச் செய்தி P5




# "எதிர்ப்புக்களுக்காக புறக்கணிக்க முடியாது"

எதிர்ப்புக்களுக்காக மக்கள் எமக்கு வழங்கிய ஆணையைப் புறக்கணிக்க முடியாது. ஆகவே, 'கிளீன் ஸ்ரீலங்கா' செயற்திட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுப்போம். 'கிளீன் ஸ்ரீலங்கா' செயற்திட்டம் தொடர்பில் எதிர்வரும் 21 மற்றும் 22 ஆம் திகதிகளில் பாராளுமன்றத்தில் விசேட விவாதம் நடத்தத் தீர்மானிக்கப் பட்டுள்ளது என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.



தொடர்ச்சி P2

## பயங்கரவாதத் தடைச் சட்டம்

# அமுலில் உள்ளது ஏன்?



பயங்கரவாத தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி அரசியல் எதிர்கருத்து கொண்டோர், அரசுக்கு எதிரான போராட்டங்கள், வேலை நிறுத்தங்களில் ஈடுபடுவோர் மற்றும் ஊடகவியலாளர்களையும் ஒடுக்கும் நடவடிக்கைக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக இலங்கை கையொப்பமிட்ட மற்றும் அதற்குக் கட்டுப்பட்ட சர்வதேச சட்டங்கள் தொடர்பிலும் முரண்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## லசந்த விக்கிரமதுங்கவின் மரணம்:

# "நீதி நிலைநாட்டப்படும்"



சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் மரணம் தொடர்பில் நீதியை நிலைநாட்ட அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# 45 இலட்சம் மெற்றிக் தொன்

## நெல் விளைச்சல் கிடைக்கும்



இம்முறை 45 இலட்சம் மெற்றிக்தொன் நெல் விளைச்சல் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், விவசாயிகளிடமிருந்து 3 இலட்சம் மெற்றிக் தொன் நெல்லை கொள்வனவு செய்ய நடவடிக்கை

தொடர்ச்சி P2

## இந்தியா– இலங்கைக்கு இடையில்

# "பாலம் வேண்டும்"



இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பாலம் அமைக்கப்பட வேண்டும். இதன் மூலம் இலங்கை பல அனுகூலங்களைப் பெறமுடியுமென மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் எம்.பியுமான பெ.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். பாராளுமன்றத்தில் புதன்கிழமை 08) இடம்பெற்ற பல ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## இஸ்ரேல் பிரஜைகளினால் நிர்மாணிக்கப்படும்

# "மத ஸ்தாபனங்களுக்கு அனுமதி வழங்கவில்லை"

நாட்டில் இஸ்ரேலிய பிரஜைகளினால் நிர்மாணிக்கப்பட்டு வரும் மத ஸ்தாபனங்களுக்கு அரசாங்கம் அனுமதி வழங்கவில்லை. அந்த நிர்மாணங்களை நிறுத்துவதற்கு அரசாங்கம் விரைவில் நடவடிக்கை எடுக்கும் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.



தொடர்ச்சி P2

## லசந்த படுகொலை தொடர்பில்

# "நீதியை நிலைநாட்டுங்கள்"



சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டு இன்றுடன் 16 வருடங்கள் ஆகின்றன. இப்போதாவது நீதியை நிலைநாட்டுங்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2

# வட்டவான் தொல்லியல் நிலையத்துக்கு எதிர்ப்பு

■ *எஸ்.கீதபொன்கலன், அ.அச்சுதன்*

திருகோணமலை- வெருகல் பிரதேச செயலகப்பிரிவின் வட்டவான் பகுதியில், திங்கட்கிழமை(06) திடீரென தொல்லியல் திணைக்களத்தால் நடப்பட்ட 'வட்டவான் தொல்லியல் நிலையம்' என்ற பெயர் பலகைக்கு



தொடர்ச்சி P2

# துயிலும் இல்ல காணியை விடுவிக்குமாறு கோரிக்கை




■ *சண்முகம் தவசீலன்*

விசுவமடு-தேராவில் மாவீரர் துயிலும் இல்ல காணியை இராணுவத்தினரிடமிருந்து விடுவித்து மாவீரர் தினத்தில் தமது பிள்ளைகளுக்கான நினைவேந்தலைச் சுதந்திரமாக அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு ஜனாதிபதி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரி கையெழுத்து போராட்டம் புதன்கிழமை (08) முன்னெடுக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

# "மோசடிகள், குற்றங்கள் மறைக்கப்படுகின்றன"

பிரதான அரிசி உற்பத்தியாளர்கள் நாளொன்றுக்கு 40 இலட்சம் ரூபாய் இலாபமடைந்துவரும் நிலையில் 'கிளீன் ஸ்ரீ லங்கா' திட்டம் என்று குறிப்பிட்டுக் கொண்டு பெரும் மோசடிகளும், குற்றங்களும் மறைக்கப்படுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பியான கபீர் ஹாசிம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (08) இடம் பெற்ற பல ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் 100 நாள் நிர்வாகத்தில் அரிசி, தேங்காய், ஆகிய பொருட்களின் விலைகள் அமெரிக்க டொலருக்கு நிகரானதாக மாறியுள்ளன.



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# “சட்டவிரோத அகதிகள் ஒரு இலட்சம் பேர் வருவர்”

எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்தும் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்த பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால மேலும் பதிலளிக்கையில்,

மியன்மார் நாட்டில் இருந்து 116 பேர் சட்டவிரோதமான முறையில் இலங்கைக்குள் படகு மூலம் வருகைத் தந்துள்ளனர்.

இவர்களிடம் பொலிஸார் முன்னெடுத்த ஆரம்பக்கட்ட விசாரணைகளில் அந்த அகதிகள் மியன்மார் நாட்டு நாணய அலகில் 500 இலட்சத்தை ஆட்கடத்தல் நபர்களுக்குக் கொடுத்துள்ளதாகவும், அத்துடன், போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்திய தரப்பினருக்கு மியன்மார் நாணய அலகில் 800 இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்விடயம் குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளோம்.

தற்போது மனிதாபிமான அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் ஊடாக உரிய வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகள் மற்றும் புலனாய்வு தகவல்களுக்கு அமைய எதிர்வரும் நாட்களில் இலங்கைக்கு 1 இலட்சம் அளவிலான அகதிகள் சட்டவிரோதமான முறையில் வருகை தருவதற்கான சாத்தியம் காணப்படுகிறது என்றும் கூறியுள்ளார்.

# அமுலில் உள்ளது ஏன்?

தற்போதைய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிராகப் பாராளுமன்றத்திலும் வெளியிலும் கருத்து தெரிவித்திருந்தமையால், இந்த சட்டத்தை இரத்துச் செய்வதா? அல்லது அதற்கான திருத்தத்தைக் கொண்டு வருவதா? என்பது குறித்தான தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (08) அரசாங்கத்திடம் கேள்வி எழுப்பும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டையும், அதனைத் திருத்துவதற்கு அரசாங்கம் முன்வைக்கும் மாற்றுத் தீர்வுகள் தொடர்பிலும் எதிர்க்கட்சித் தலைவர் இதன்போது கேள்வி எழுப்பினார். இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பில் அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறும் எதிர்க்கட்சித் தலைவர் இதன்போது வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேலும், இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும், 72 மணிநேரம் தடுப்புக் காவலில் வைப்பது தொடர்பாக அரசாங்கத்தின் கருத்து தொடர்பிலும், இந்த சட்டத்தின் கீழ் வாரண்ட் இல்லாமல் கைது செய்வது உள்ளிட்டவை குறித்தும் கேள்வி எழுப்பிய எதிர்க்கட்சித் தலைவர், சர்வதேச மனித உரிமைகள் நியமங்களின்படி இதனை நடைமுறைப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

## “எதிர்ப்புக்களுக்காக புறக்கணிக்க முடியாது”

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (08) இடம்பெற்ற பிரதமரிடத்திலான கேள்வி நேரத்தின் போது அரச தரப்பின் எம்.பி. அஸித நிரோசன் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், நாம் பொருளாதார ரீதியில் மாத்திரம் வீழ்ச்சியடையவில்லை. சமூக கட்டமைப்பிலும் வீழ்ச்சியடைந்துள்ளோம். ‘கிளீன் ஶ்ரீலங்கா’ செயற்திட்டம் ஊடாக மக்களை ஊக்கப்படுத்தல் அதன் ஊடாக சிறந்த மாற்றத்தை ஏற்படுத்துவது பிரதான இலக்காகும்.மக்கள் மத்தியில் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்துவதற்காகவே 18 உறுப்பினர்களை உள்ளடக்கிய வகையில் ஜனாதிபதி செயலணி ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய தற்போது அரச கட்டமைப்பின் ஊடாக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. தனியார் தரப்பினரும் தன்னிச்சையான முறையில் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

அரசாங்கத்தைப் பொறுப்பேற்கும் போது, பல சவால்களையும் ஏற்றுக்கொண்டுள்ளோம். ‘கிளீன் ஶ்ரீலங்கா’ செயற்திட்டத்துக்கு எதிரான கருத்துக்களைக் குறிப்பிடுவதை அவதானிக்க முடிகிறது. நாடு என்ற ரீதியில் முன்னேற்றமடைவதற்கு அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். என்பதை வலியுறுத்துகிறோம் என்றார்.

## 45 இலட்சம் மெற்றிக் தொன் நெல் விளைச்சல் கிடைக்கும்

எடுத்துள்ளதாகக் கமத்தொழில் மற்றும் கால்நடை அபிவிருத்தி பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (08) இடம் பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் ஐக்கிய மக்கள் சக்தி எம். பியான ரோஹண பண்டார எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பதிலளிக்கையில்,

2023 மற்றும் 2024 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் விவசாயிகளிடமிருந்து அரசாங்கம் 5000 மெற்றிக் தொன் நெல்லை மாத்திரமே கொள்வனவு செய்துள்ளது. அரிசி தட்டுப்பாடு பற்றிப் பேசுபவர்கள் இவ்விடயத்தை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்வனவு செய்யும் போது வருடம் முழுவதற்கும் உரியவாறாக அமையும் வகையில் நெல்லுக்கு உத்தரவாத விலை பேணப்படாத காரணத்தால் விவசாயிகளும், நுகர்வோரும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். வர்த்தகர்கள் விலையைத் தீர்மானித்துக் கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது

ஒவ்வொரு வருடமும் அக்டோபர் முதல் டிசம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் அரிசியின் விலை உயர்வடையும். நெல் மற்றும் அரிசியின் விலையை நிலையாகப் பேணுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பெரும்போக விவசாயத்தில் 8 இலட்சத்துக்கும் அதிகளவான ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய 45 இலட்சம் மெற்றிக் தொன் நெல் விளைச்சல் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்றார்.

## “நீதி நிலைநாட்டப்படும்”

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (08) இடம்பெற்ற ஒழுங்கு விதிகள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றிய ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமினால் லசந்த விக்கிரதுங்கவின் மரணம் தொடர்பாக முன்வைக்கப்பட்ட கருத்துக்குப் பதிலளிக்கையிலேயே நீதி அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார். மேலும் நீதி அமைச்சர் கூறுகையில், லசந்த விக்கிரமதுங்கவின் மரணம் தொடர்பிலும் அந்த சம்பவம் தொடர்பில் நீதியை நிலைநாட்டுவோம். அதற்கான நடவடிக்கைகளை நாங்கள் முன்னெடுத்து வருகின்றோம்.

அரசாங்கம் என்ற வகையில் நீதித்துறை சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டும். கடந்த காலங்களில் இவ்வாறான வழக்குகளுக்கு இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டன. ஆனால் இந்த அரசாங்கம் மிகவும் சிறப்பாக முன்னெடுக்கின்றது என்றார்.

## “நீதியை நிலைநாட்டுங்கள்”

பாராளுமன்றத்தில் புதன்கிழமை(08) விசேட கூற்றை முன்வைத்தே இந்த வேண்டுகோளை விடுத்த அவர் மேலும் உரையாற்றுகையில்,

சிரேஷ்ட ஊடகவியலாளர்களான லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டு 16 வருடங்கள் கடந்துள்ள போதிலும், இந்த கொலைக்கான மூல காரணத்தையும், கொலைகாரர்களையும் இதுவரை எந்த அரசாங்கத்தாலும் கண்டுபிடிக்க முடியாது போயுள்ளன. இவ்விவகாரத்தை அவரது மகள் அஹிம்சா விக்ரமதுங்க ஐக்கிய நாடுகள் சபையிடம் எடுத்துச் சென்றுள்ளார்

அத்துடன், சிரச ஊடக வலையமைப்பின் மீதான கொடூரத் தாக்குதல் இடம்பெற்று 16 வருடங்கள் கடந்துள்ளன. லசந்த விக்கிரமதுங்க மற்றும் ராஜமகேந்திரன் ஆகியோர் நீதி மற்றும் நியாயத்திற்காக முன் நின்றார்கள். எனவே லசந்த விக்ரமதுங்கவின் படுகொலை தொடர்பில் உண்மையைக் கண்டறிந்து நீதியை நிலைநாட்ட வேண்டும் என்றார்.

## “பாலம் வேண்டும்”

மேலும் அவர் கூறியுள்ளதாவது, இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் பாலம் அமைக்கப்பட வேண்டும். அவ்வாறு பாலம் அமைக்கப்பட வேண்டும் என்பதுதான் எமது நிலைப்பாடும்.

இலங்கை -இந்தியாவிடையில் 18 கிலோ மீற்றர் தான் இடைவெளி. இதில் பாலம் அமைத்தால் நாம் காரிலேயே இந்தியாவுக்குப் போய் வந்து விட முடியும், அதேபோன்று அங்குள்ளவர்களும் இங்கு வந்து போவார்கள்.

இந்திய சுற்றுலாப் பயணிகள் அதிகமானோர் இலங்கை வருகின்றனர். இவ்வாறான நிலையில், பாலம் மேய்த்தல் அந்த எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கும். எனவே, இலங்கை இந்தியாவுக்கிடையில் பாலம் அமைப்பது தொடர்பில் இந்த அரசு முன்னுதாரணமாகச் செயற்பட வேண்டும் என தெரிவித்துள்ளார்.

## வட்டவான் தொல்லியல் நிலையத்துக்கு எதிர்ப்பு

ஆட்சேபம் தெரிவித்து,வெருகல் பிரதேச செயலகத்தின் முன்பாக புதன்கிழமை(08) பொதுமக்களால் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

வெருகல் பிரதேச செயலக பிரிவின்,திருகோணமலை-மட்டக்களப்பு பிரதான வீதியில் அமைந்துள்ள வட்டவான் பிரதேசத்திற்கு ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள மலைப்பகுதி இவ்வாறு திடீர் என தொல்லியல் பகுதியாக பெயரிடப்பட்டுள்ளது.

இவ் மலைப்பகுதியை சூழவுள்ள 160 ஏக்கர் நிலத்தில்,164 குடும்பங்களை சேர்ந்த விவசாயிகள் நீண்ட காலமாக பயிர்செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த காலங்களில் தொல்லியல் பகுதியாக அடையாளப்படுத்தப்பட்ட இடங்களில் புத்தர் சிலைகள் நிறுவப்பட்டு,பொது மக்களின் விவசாய நிலங்கள் விகாரைகளுக்கு உரியது என்று சர்சைகள் ஏற்படுத்தப்பட்டது.இவ்வாறு இங்கும் தமது விவசாய நிலங்கள் அபகரிக்கப்படலாம் என பிரதேச மக்கள் கருதுகின்றனர்.



## துயிலும் இல்ல காணியை விடுவிக்குமாறு கோரிக்கை

**தமது உறவுகளை சுதந்திரமாக நினைவு கூறுவதற்கு ஏற்ற வகையிலே குறித்த காணியை விடுவித்து தருமாறும் குறித்த கையெழுத்துக்கள் அடங்கிய மகஜரை வடக்கு மாகாண ஆளுநர் ஊடக ஜனாதிபதிக்கு அனுப்ப உள்ளதாகவும் உறவுகள் தெரிவித்தனர்**

தேராவில் மாவீரர் துயிலுமில்ல பணிக் குழு உறுப்பினர்கள் மாவீரர்கள் பெற்றோர்கள் உரித்துடையவர்கள் இணைந்து குறித்த கையெழுத்து போராட்டத்தை இன்று(08) முன்னெடுத்தனர்

தேராவில் மாவீரர் துயிலும் இல்லத்தின் காணியின் பெரும்பகுதி இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டிருக்கின்ற நிலைமையில் அந்த அபகரிக்கப்பட்ட துயிலுமில்ல காணிக்கு முன்பாக குறித்த கையெழுத்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நாட்டினுடைய புதிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க அவர்கள் மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதற்கு அனுமதி வழங்கியதை போன்று தங்களுடைய பிள்ளைகளின் கல்லறைகள் இருக்கின்ற குறித்த காணியை இராணுவத்தினரிடமிருந்து விடுவித்துத் தருமாறு கோரி குறித்த கையெழுத்து போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்தவர்கள் குறித்த காணியில் இராணுவத்தினர் இருந்துகொண்டு கல்லு அறுத்து விற்கின்ற செயற்பாடுகளையே செய்கின்றார்கள் எனவும் இது ஒரு இராணுவத்தின் தேவைக்காக சுவீகரிக்கப்பட்ட காணி அல்ல எனவும் இந்த காணியை விடுவித்து தமது உறவுகளை சுதந்திரமாக நினைவு கூறுவதற்கு ஏற்ற வகையிலே குறித்த காணியை விடுவித்து தருமாறும் குறித்த கையெழுத்துக்கள் அடங்கிய மகஜரை வடக்கு மாகாண ஆளுநர் ஊடக ஜனாதிபதிக்கு அனுப்ப உள்ளதாகவும் உறவுகள் தெரிவித்தனர்.

## “மத ஸ்தாபனங்களுக்கு அனுமதி வழங்கவில்லை”

**சுற்றுலாப் பயணிகளுக்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கையே தவிர அனாவசியமான மத ஸ்தாபனங்களுக்கான பாதுகாப்பு அல்ல. சுற்றுலாப் பயணிகளாக நாட்டிற்கு வருகை தரும் எவருக்கும் இங்கு வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சட்ட ரீதியாக எந்த அனுமதியும் கிடையாது**

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (08) இடம்பெற்ற பிரதமரிடத்திலான கேள்வி நேரத்தில், ஐக்கிய மக்கள் சக்தியின் எம் பியான முஜிபுர் ரஹ்மான் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பிரதமர் கூறுகையில்,

நாட்டிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்குப் பாதுகாப்பு வழங்குவது அரசாங்கத்தின் பொறுப்பு . அதனை இஸ்ரேல், பலஸ்தீன் என இன ரீதியாக நோக்க முடியாது. குறிப்பாக அறுகம்பே சம்பவங்களுக்குப் பின்னர் கிடைத்த புலனாய்வு தகவல்களுக்கு அமைய சுற்றுலாப் பயணிகளுக்கு ஏதாவது பாதிப்பு ஏற்படலாம் என கருதியே பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அந்த வகையில், அது சுற்றுலாப் பயணிகளுக்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கையே தவிர அனாவசியமான மத ஸ்தாபனங்களுக்கான பாதுகாப்பு அல்ல. சுற்றுலாப் பயணிகளாக நாட்டிற்கு வருகை தரும் எவருக்கும் இங்கு வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சட்ட ரீதியாக எந்த அனுமதியும் கிடையாது.

எனினும், இஸ்ரேல் நாட்டவர் மட்டுமின்றி, வேறு நாடுகளில் இருந்தும் இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகளாக வருகை தந்து இவ்வாறு வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக அறிய முடிகிறது.

அதனை ஒரு பிரச்சினையாக நாம் இனங் கண்டுள்ளோம்.

அதற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதுடன், அது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு அவ்வாறான வர்த்தக நடவடிக்கைகளை நிறுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கான வேலைத்திட்டம் ஒன்றை நாம் முன்னெடுத்துள்ளோம் என்றார்.

## “மோசடிகள், குற்றங்கள் மறைக்கப்படுகின்றன”

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க ஜனாதிபதித் தேர்தலின் போது, அரிசி மாபியாக்களை முடிவுக்குக் கொண்டு வருவதாக உறுதியளித்தார் ஆட்சிக்கு வந்து 100 நாட்கள் முடிவடைந்துள்ள போதும் மாபியாக்களை முடிவுக்குக் கொண்டுவரவில்லை. குறைந்தபட்சம் அரிசி மாபியாக்களை இல்லாதொழிக்கும் திட்டங்களைக் கூட முன்வைக்கவில்லை.

உலக உணவு பாதுகாப்புத் திட்டத்தின் அறிக்கைக்கு அமைய இலங்கையின் உணவு பாதுகாப்பு கடந்த ஆறு மாத காலப்பகுதியில் மாத்திரம் 7 சதவீதத்தால் உயர்வடைந்துள்ளது. பெருந்தோட்ட மக்கள் தமது மாத வருமானத்தில் 75 சதவீதத்தை உணவு பொருட்களுக்காகவே செலவழிக்கிறார்கள்.

ஆகவே, அரிசி விலையை குறைத்தால் மந்த போஷணை வீதம், வாழ்க்கைச் செலவு குறைவடையும் என்றார்.

# தமிழினப் பற்றாளர் அமரர் மதிசூடிக்கு அஞ்சலி

வி.ரி.சகாதேவராஜா

சிறந்த சமூக செயற்பாட்டாளர் தமிழினப் பற்றாளர் அமரர் குலத்துங்கம் மதிசூடியின் இரங்கல் மற்றும் ஆத்மார்த்த அஞ்சலி நிகழ்வுகள் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் பரவலாக இடம்பெற்றன.

அதேவேளை, அவரது 41 வது நாள் நினைவு தினத்தை முன்னிட்டு, பின்தங்கிய பிரதேச நலிவுற்ற மக்களுக்கு அரிசி, சாறி, சாறன், பெட்சீற் உள்ளிட்ட உதவிகள் மற்றும் உணவுகள் வழங்கப்பட்டன.

பொத்துவில் - செல்வபுரம், தாண்டியடி, சங்குமண்கண்டி, திருக்கோவில் காயத்ரி கிராமம், சொறிக்கல்முனை, காரைதீவு, குருக்கள்மடம்,தாந்தாமலை கற்சேனை, கல்லடி ஆகிய இடங்களில் இவ் உதவிகள் வழங்கப்பட்டன.

கனடாவில் இருந்து இதற்கென வருகைதந்த அவரது மனைவி திருமதி நித்தி மதிசூடி, மருமகன் மாதவன், உற்ற உறவினர்களான மதனராஜன் ,.குணா மற்றும் யாழ்ப்பாணம் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து வந்த உறவினர்களும் இந்த நிகழ்வுகளில் கலந்து கொண்டனர்.

நிகழ்வுகள் ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளரும் பிரபல ஊடகவியலாளருமான வித்தகர் விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா தலைமையில் நடைபெற்றன.

பொத்துவில் பிரதேச சபையின் முன்னாள் உபதவிசாளர் பெருமாள் பார்த்தீபன் கௌரவ அதிதியாக கலந்து சிறப்பித்தார். இணைப்பாளராக காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் மற்றும் கீதா ஜெயசிறில் ஆகியோர் செயற்பட்டனர்.



# ரோகிங்யா முஸ்லிம்களில் 12 பேர் முல்லைத்தீவுக்கு அனுப்பி வைப்பு

கீத்

கடந்த மாதம் இலங்கைக்குள் வந்திருந்த ரோஹிங்யா முஸ்லிம்களில் 12 நபர்கள் சட்ட விரோத குடியேற்றவாசிகள் ஏற்றி வந்தார்கள் என்ற அடிப்படையில் கைது செய்யப்பட்டு 14 நாட்கள் திருகோணமலையில் விளக்கமறியில் வைக்கப் பட்டிருந்தனர்.

கடந்த வருடம் 31ஆம் திகதி மீண்டும் அவர்களை நீதிமன்றத்தில் முன்னிறுத்தி மீண்டும் அவர்களை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டிருந்தார். எனினும், வியாழக்கிழமை(09) அவர்கள் மீதான குற்றச்சாட்டை சி.ஐ.டியினர் திரும்பப் பெற்ற நிலையில், அவர்களும் அந்த 12 நபர்களும் விசா இன்றி உள்ளே இருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு முல்லைதீவில் வைக்கப்பட்டிருந்த 103 நபர்களுடன் இணைக்கும் நோக்கில் திருகோணமலையில் இருந்து விடுவிக்கப்பட்டு அவர்களையும் முல்லைத்தீவு நோக்கி பொலிஸார் அழைத்துச் சென்றுள்ளனர்.




# 2 கி.கி. கொக்கைனுடன் வெளிநாட்டவர் கைது



டி.கே.ஜி.கபில

சுமார் ஒன்பது கோடியே 70 இலட்சம் ரூபாய் (97 மில்லியன் ரூபாய்) பெறுமதியான கொக்கெய்ன் போதைப்பொருளுடன் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து அறிவிக்கப்படாத 'கிரீன் சேனல்' ஊடாக வெளியேற முயன்ற பொஸ்னியா நாட்டைச் சேர்ந்த 66 வயதான நபரை விமான நிலையத்தின் வருகை முனையத்தில் வைத்து போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் அவரை புதன்கிழமை (08) அதிகாலை கைது செய்துள்ளனர்.

அவர் தனது சூட்கேஸில் 02 கிலோ 759 கிராம் கொக்கெய்ன் போதைப்பொருள் மிக நுணுக்கமாக மறைத்து வைத்திருந்தார், கால்களைச் சுத்தம் செய்யும் பிரஸ்கள் 114 மறைத்து எடுத்து வந்துள்ளார்.

அவர் கொலம்பியாவில் இருந்து இந்த போதைப்பொருளுடன் பயணிக்கத் தொடங்கி கத்தார் தோஹாவுக்கு வந்தார். அதன் பின்னர், புதன்கிழமை (08) அன்று அதிகாலை 02.40 மணியளவில் கட்டார் எயார்வேஸ் விமானமான KR-662 மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

கைது செய்யப்பட்ட பொஸ்னிய பிரஜையுடன் அவர் கொண்டு வந்த கொக்கெய்ன் போதைப்பொருள் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவின் அதிகாரிகளிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# சீமெந்து மூடைகளை திருடியவர் தப்பியோட்டம்



ரீ.எல்.ஜவ்பர்கான்

காத்தான்குடி கடற்கரை பிரதேசத்தில் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் வீட்டில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த சீமெந்து மூடைகளை திருடிய சந்தேக நபர் தப்பியோடி உள்ள நிலையில், அவரை பொலிஸார் தேடி வருவதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஏ.எஸ்.எம். ஏ.ரஹீம் தெரிவித்துள்ளார்.

குறித்த வீட்டின் கட்டடப் பணிகள் நிறைவு பெற்ற நிலையில், வீட்டைப் பூட்டி விட்டு அடுத்த நாள் பணிகளுக்காக சென்று பார்த்தபோது, வீட்டின் முன் கதவை உடைத்து உள்ளே இருந்த 13 சீமெந்து மூடைகளை தனது வாகனத்திலேயே திருடிச் சென்றுள்ள நபர் தொடர்பில் பொலிஸாருக்கு தெரியவந்துள்ளது

இதனையடுத்து,

சந்தேக நபரையும் அவரது வாகனத்தையும் பொலிஸார் தேடி வருவதுடன், மேலதிக விசாரணைகளையும் காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நண்பரின் பாதத்தை துண்டாடியவர் கைது

பாணந்துறை-பின்வத்த பிரதேசத்தில் இரண்டு நண்பர்களுக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதை அடுத்து, தனது நண்பரின் பாதத்தை வெட்டி துண்டாடியதாகக் கூறப்படும் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டதாக பின்வத்த பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாணந்துறை, பின்வத்த பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட நபரும் சந்தேக நபரும் பின்வத்த புகையிரதப் பாதைக்கு அருகில் மது அருந்திக் கொண்டிருந்ததாகவும், நீண்ட நேர உரையாடலுக்குப் பின்னர் அவர் காலிலும் தோளிலும் மன்னா கத்தியால் தாக்கப்பட்டதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# குருக்கள் மீது தாக்குதல்

யது பாஸ்கரன்



கிளிநொச்சி- கனகாம்பிகை குளம் பகுதியைச் சேர்ந்த சிவ ஸ்ரீ சிவகுமாரன் குருக்கள் மீது அங்கிருந்த ஒருவர் கடுமையாகத் தாக்கியதில், படுகாயமடைந்த குருக்கள் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி கனகாம்பிகை குளம் கிராம அலுவலர் அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை (07) பகல் 11 மணியளவில் மீளாய்வு நடவடிக்கை நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் மீளாய்வு செய்வதற்குச் சென்ற போதே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த குருக்கள் அணிந்திருந்த உருத்திராக்க மாலை மற்றும் தங்கச் சங்கிலி என்பனவும் அறுத்து வீசப்பட்டுள்ளன.


## கம்பஹா பிரதேச சபை விலைமனுக் கோரல் விளம்பரம்

### கொள்முதல் இலக்கம் - DS/01/2025

கம்பஹா பிரதேச சபைக்கு சொந்தமான 59-8389 ஆம் இலக்க கெப் வண்டியை பழுதுபார்ப்பதற்காக அனுபவமுள்ள அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து ஏலங்கள் வரவேற்கப்படுகின்றன. 2025.01.31 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்குள் அல்லது அதற்கு முன்பாக பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் வந்து அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள ஏலப் பெட்டியில் இடலாம் அல்லது சமர்ப்பிக்கலாம். இதற்கான ஏல ஆவணங்கள் 2025.01.10 ஆம் திகதி முதல் 2025.01.30 ஆம் திகதி வரை காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.30 மணி வரை வேலை நாட்களில் கம்பஹா பிரதேச சபையின் தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ள முடியும் மற்றும் கெப் வண்டியை பரிசோதிக்க முடியும்.

2. ஏலங்களைத் திறப்பதுஇ அந்த ஏலங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டவுடன் உடனடியாக பிரதேச சபையின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெறும் மேலும் நீங்கள் அல்லது உங்கள் எழுத்துப்பூர்வ அனுமதியைப் பெற்ற பிரதிநிதி இந்த நிகழ்வில் கலந்து கொள்ளலாம்.

3. ஏலங்கள் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்ப படிவங்களை 2025.01.10 ஆம் திகதி முதல் 2025.01.30 ஆம் திகதி வரை காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.30 மணி வரை மீள் வளங்கப்படாத ரூ.1000.00 + VAT தொகை இந்த அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

4. அந்த விலைமனு விண்ணப்ப படிவத்தின் அசல் மற்றும் நகல் என 02 பிரதிகளாக தயாரித்து பெயரிட்டு அவற்றை இரண்டு கடித உறைகளில் இட்டு சீல் செய்யவும். அவ்வாறு சீல் செய்யப்பட்ட இரண்டு கடித உறைகளையும் ஒரே கடித உறையில் வைத்து சீல் செய்யவும், அந்த கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "59 - 8389 ஆம் இலக்க கெப் வண்டியை பழுதுபார்ப்பதற்கான விலைமனுக் கோரல்"என்று குறிப்பிடப்பட வேண்டும்.

5. பரிந்துரைக்கப்பட்ட விவரக்குறிப்புகளுடன் பழுதுபார்த்தற்க்கான ரசீதுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்து மட்டுமே சீர் செய்யப்படும்.

6. ஏலத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட ஏலத் தொகையின் 1மூ மதிப்பிற்கு சமமான வங்கி உத்தரவாதத்தை (BID BOND) சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமாகும்.

7. இந்த நிறுவனத்தின் கொள்முதல் குழுவிற்கு ஏலங்களை ஏற்க அல்லது நிராகரிக்க அதிகாரம் உள்ளது.

8. இந்த நிறுவனத்தின் கொள்முதல் குழுவிற்கு தேவையான சந்தர்ப்பங்களில் விலையை திரும்பப் பெறும் அதிகாரமும் உள்ளது.

**2025.01.09 ஆம் திகதி**
**கம்பஹா பிரதேச சபையில்.**
**தொலைபேசி இலக்கம்:**
**033 22 22020**
**033 22 20145**

**எஸ். ஏ.என்.பீ.சுரவீர**
**செயலாளர் மற்றும் கம்பஹா பிரதேச சபை அதிகாரங்கள், செயல்பாடுகள், கடமைகளை நிறைவேற்றும் அதிகாரி,**
**கம்பஹா பிரதேச சபை.**



## கம்பஹா பிரதேச சபை

### வாடகை அடிப்படையில் டபல் கெப் வண்டியை பெற்றுக்கொள்வதற்கான விலைமனுக்கோரல்

### கொள்முதல் இல – DS/02/2025

கம்பஹா பிரதேச சபையின் கடமைகளுக்காக 2025.02.16 ஆம் திகதி முதல் 2025.12.31 ஆம் திகதி வரையான காலத்திற்கு 4WD வகையான டபல் கெப் வண்டியை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர்களிடம் இருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02. குறிப்பிடப்பட்ட வாடகை வண்டியானது கீழ் குறிப்பிடப்பட்டவாறு தரத்தில் இருக்க வேண்டும்.

- 2015 - 2020 க்கு இடையில் தயாரிக்கப்பட்ட இன்ஜின் திறன் 2450 CC - 3000 CC க்கு இடைப்பட்ட 4WD உலகப் புகழ்பெற்ற வர்த்தக நாமத்தையுடைய டபல் கெப் வண்டியாக இருக்க வேண்டும்.

03. 2025.01.10 ஆம் திகதி முதல் 2025.01.30 ஆம் திகதி வரை காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.30 மணி வரை மீள் வளங்கப்படாத ரூ.1000.00 + VAT தொகையை பணமாக செலுத்தி எழுத்துப்பூர்வ விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் மூலம் ஏல ஆவணங்களை அபிவிருத்திப் பிரிவில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். மேலதிக தகவல்களுக்கு 033-2220145 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

04. ஏல பாதுகாப்பாக 25,000.00 ரூபாய் (இருபத்தைந்தாயிரம் ரூபாய்) தொகையை கம்பஹா பிரதேச சபையில் வைப்பிலிடப்பட வேண்டும் மற்றும் மேற்படி ரசீதுகள் சீல் செய்யப்பட்ட விலைமனுக்கோரல் விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

05. அந்த விலைமனு விண்ணப்ப படிவத்தின் அசல் மற்றும் நகல் என 02 பிரதிகளாக தயாரித்து பெயரிட்டு அவற்றை இரண்டு கடித உறைகளில் இட்டு சீல் செய்யவும். அவ்வாறு சீல் செய்யப்பட்ட இரண்டு கடித உறைகளையும் ஒரே கடித உறையில் வைத்து சீல் செய்யவும், அந்த கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வாடகை அடிப்படையில் டபல் கெப் வண்டியை பெற்றுக்கொள்வதற்கான விலைமனுக்கோரல்" என்று குறிப்பிடப்பட்டு 2025.01.31 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "பிரதேச சபை செயலாளர் மற்றும் கம்பஹா பிரதேச சபையின் அதிகாரங்கள், செயல்பாடுகள், கடமைகளை நிறைவேற்றும் அதிகாரி, கம்பஹா பிரதேச சபை, மிரிஸ்வத்தை, முதுன்கொட" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும் அல்லது கம்பஹா பிரதேச சபையின் தலைமை காரியாளயத்தில் செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் இடப்பட வேண்டும். தாமதமாக கிடைக்கப்பெறும் விலைமனுக்கோரல் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்களை ஏற்றுக்கொள்வதற்கான நேரம் முடிந்தவுடன் உடனடியாக வருகை தரும் ஏலதாரர்கள்/பிரதிநிதிகள் முன்னிலையில் கம்பஹா பிரதேச சபையின் கேட்போர் கூடத்தில் விலைமனுக்கள் திறந்து வைக்கப்படுவார்கள்.

06. இந்த நிறுவனத்தின் கொள்முதல் குழுவிற்கு ஏலங்களை ஏற்கவும் அல்லது நிராகரிக்கவும் அதிகாரங்கள் உள்ளது.

**2025.01.09 ஆம் திகதி**
**கம்பஹா பிரதேச சபையில்.**
**தொலைபேசி இலக்கம்:**
**033 22 22020**
**033 22 20145**

**எஸ். ஏ.என்.பீ.சுரவீர**
**செயலாளர் மற்றும் கம்பஹா பிரதேச சபை அதிகாரங்கள், செயல்பாடுகள், கடமைகளை நிறைவேற்றும் அதிகாரி,**
**கம்பஹா பிரதேச சபை.**

# வினாத்தாள்களை கசிய விட்டவர்களை தரம் பாராமல் தண்டிக்கவும்

ஆசிரியர் சமுதாயத்திற்கு வழிகாட்டி. அதனால்தான் ஆசிரியர் ஒரு உன்னத மனிதர். அடுத்த தலைமுறைக்கு வழிகாட்டும் ஆசிரியர் என்பவர் ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இருப்பது அவசியம். அவர்களின் வழிகாட்டுதலால் தான் ஒரு சமுதாயம் இவ்வளவு தூரம் வந்துள்ளது. அதனால்தான் ஆசிரியர்கள் மதிக்கப்படுகிறார்கள். உலகின் தலைசிறந்த மதத் தலைவர்களுக்கும் ஆசிரியர்கள் இருந்தனர்.

ஆனால், அண்மைய நாட்களில் கேட்கப்படும் சில வரையறுக்கப்பட்ட ஆசிரியர்களின் செயற்பாடுகள் ஆசிரியர் தொழிலுடன் ஒத்துப்போகவில்லை. புலமைப்பரிசில் பரீட்சையின் வினாத்தாள்கள் கசிந்தமை முதல் சர்ச்சைக்குரிய விடயமாகும். இறுதியில் இப்பிரச்சினை உயர்நீதிமன்றம் வரை சென்றது, மேலும், கல்வி உதவித்தொகை என்பது மாணவர்களை உடைக்கும் பிரச்சினையாக இருந்தது. ஒரு ஆசிரியரும் அதிகாரியும் சேர்ந்து வினாத்தாள்களை வழங்கியது கண்டுபிடிக்கப்பட்டது, அவர்களுக்கு ஐம்பது இலட்சம் அபராதம் விதிக்கப்பட்டது.

அத்துடன், வடமத்திய மாகாண பரீட்சைகளின் வினாத்தாள்கள் வாட்ஸ்அப் குழுக்களில் பதிவிடப்பட்டமையினால் பரீட்சை இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. அங்கு நடத்தப்பட்ட விசாரணைகளின் போது, வினாத்தாள் தயாரிக்கும் பொறுப்பிலிருந்த ஆசிரியர் ஒருவரே இந்த வினாத்தாள்களை கசிய விட்டுள்ளமை தெரியவந்தது. அந்த மாகாணத்தில் உள்ள தனியார் வகுப்புகளில் அந்த வினாத்தாள்கள் விவாதிக்கப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

சமூகப் பொறுப்புணர்வுடன் இருக்க வேண்டிய ஆசிரியர்கள் பணத்தில் பணிபுரிந்து, கல்விக் கட்டணக் கும்பலின் கீழ் இருப்பதையே இது காட்டுகிறது. இது நாட்டின் கல்வியின் மீது வைத்துள்ள நம்பிக்கையை உடைக்கும் செயலாகும். இது சாதாரணமான விடயம் அல்ல.

பரீட்சை என்பது ஒரு மாணவரின் வாழ்க்கையில் ஒரு மைல்கல். அந்த நம்பிக்கை உடைந்தால் அது பாரதூரமான சோகம். இத்தேர்வுகளில் தேர்ச்சி பெற்றால்தான் இலவசக் கல்வியில் திறமைசாலிகள் முன்னேற முடியும். தேர்வுகளின் வெளிப்படைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மை காரணமாக தொலைதூர கிராமப்புறங்களைச் சேர்ந்த ஏராளமான பிள்ளைகள் தேர்வில் தேர்ச்சி பெற்று கல்வித் துறையில் முதலிடம் பிடித்தனர்.

இங்கு கல்வி நிர்வாகத்தின் நம்பகத்தன்மையின் சிக்கல் உள்ளது. வினாத்தாள் தயாரிக்கும் பொறுப்பை நம்பி ஒப்படைக்கப்பட்ட ஆசிரியர்கள் அந்த பொறுப்பை சரியாக நிறைவேற்றவில்லை. ஆசிரியர் ஒரு பொது ஊழியர். மக்களின் வரிப்பணத்தில் இருந்து அவருக்கு ஊதியம் வழங்கப்படுகிறது. எனவே, அரசின் நம்பகத்தன்மையைப் பேணுவது அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள முக்கியமான பொறுப்புகளில் ஒன்றாகும்.

நாட்டின் கல்வி முறையை சீர்குலைக்கும் வகையில் ஏதேனும் ஒரு குழு வேண்டுமென்றே செயல்பட்டால், அவர்களுக்கு அதிகபட்ச சட்ட தண்டனை வழங்கப்பட வேண்டும். அதற்கான வழிமுறைகள் விரைவாக உருவாக்கப்பட வேண்டும். வினாத்தாள் கசிவு தொடர்ந்து மோசடியாக இருந்தால், அதைக் கட்டுப்படுத்த வேண்டும். பொதுமக்களின் நம்பிக்கையை உருவாக்க இது மிக விரைவாக செய்யப்பட வேண்டும். வினாத்தாள் கசிவு மோசடியில் ஈடுபட்ட அனைவரையும் தரம் பாராமல் தண்டிப்பது முதன்மையானது.

தமிழ்Mirrorக்கு www.tamilmirror.lk
எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# தமிழரசுக் கட்சியின் எதிர்காலத்திற்கு ஆப்பு?

முருகானந்தம் தவம்

இலங்கை தமிழரசுக் கட்சி இலங்கை அரசியலில் தனது 75ஆவது ஆண்டு பவளவிழாவைக் கொண்டாடும் நிலையில், அக்கட்சிக்குள் நடக்கும் குத்து, வெட்டுக்கள், குழிபறிப்புக்கள், தலைமைத்துவ போட்டிகளினால் தவறானவர்களின் கைகளுக்கு இலங்கை தமிழரசுக் கட்சி சென்று தமிழ்த் தேசிய அரசியலில் காணாமல் போவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன.

தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவிக்கு சிறீதரனும் சுமந்திரனும் போட்டியிட்டு சுமந்திரன் தோல்வியடைந்த நிலையில் சிறீதரனை தலைமைப் பதவி ஏற்க விடாது கட்சிக்குள்ளேயே சுமந்திரன் ஆதரவு தரப்பினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை தொடர்ந்து கட்சிக்குப் பிடித்த 'சனி' கட்சியையும் கட்சி விசுவாசிகளையும் தமிழ்த் தேசிய உணர்வாளர்களையும் பாடாய்ப்படுத்தி வருகின்றது.

சிறீதரனை தலைமைப் பதவி ஏற்கவிடாது தடுக்க தமிழரசுக் கட்சிக்குள்ளேயே போடப்பட்ட வழக்குகள் போதாதென்று அதன் தலைவராக இருந்த மாவை சேனாதிராஜா கொடுத்த பதவி விலகல் கடிதம் தான் இன்று தமிழரசுக் கட்சி தவறானவர்களின் கைகளுக்குச் செல்லும் நிலைமையை ஏற்படுத்தியுள்ளதுடன், கட்சிக்கு விசுவாசமானவர்களையும் தமிழ்த் தேசிய உணர்வாளர்களையும் கட்சியிலிருந்து வெளியேற்றும் கதவையும் திறந்து விட்டுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராக உள்ள மாவை சேனாதிராஜாவின் பதவி விலகல் கடிதத்தை ஏற்றுக்கொள்வதா? இல்லையா? என்று தீர்மானிப்பதற்காக, கட்சியின் மத்தியக் குழுக் கூட்டம் அண்மையில் வவுனியா இரண்டாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நடைபெற்ற போதே தமிழரசுக் கட்சிக்கு முடிவுரை எழுதும் வகையிலான நடவடிக்கைகளை சுமந்திரன் அணி முன்னெடுத்திருந்தது

இதற்கு முன்னரான மத்தியக் குழு கூட்டத்தில் தமிழரசுக் கட்சியின் தலைமை தொடர்பாக விவாதங்கள் இடம்பெற்றுக் குழப்ப நிலை ஏற்பட்டிருந்தது. அந்தவகையில், கட்சியின் தலைவரான மாவை சேனாதிராஜாவின் பதவி விலகல் கடிதத்தை ஏற்பதா? அல்லது அவரே தொடர்ந்து தலைவராகச் செயற்படுவதற்கு அனுமதிப்பதா? என்பது தொடர்பாக வாக்கெடுப்பிற்கு விடுவதற்குக் கடந்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதன் பின்னர், தலைவரை நீக்கும் அதிகாரம் மத்தியக் குழுவிற்கு இல்லை எனத் தெரிவித்து வழக்கு தாக்கல் ஒன்றும் செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து நான் விலகவில்லை. அதன் பிரகாரம் கட்சியின் தலைமைப் பதவியில் நானே தலைவராகத் தொடர்கின்றேன். ஆகவே, தலைமைப் பதவி தொடர்பில் வாக்கெடுப்பொன்றை நடத்தவேண்டிய அவசியமில்லை என்று மாவை சேனாதிராஜா கட்சியின் பதில் பொதுச்செயலாளர் வைத்தியர் ப.சத்தியலிங்கத்துக்கு கடிதம் மூலம் அறிவித்திருந்தார்.

இவ்வாறான நிலையில் தான், கடந்த 28ஆம் திகதி சனிக்கிழமை தமிழரசுக் கட்சியின் மத்தியக் குழுக் கூட்டம் வவுனியா இரண்டாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவை சேனாதிராஜா கலந்துகொள்ளாத நிலையில், சுமந்திரன் அணி தமது இஷ்டத்துக்குத் தீர்மானங்களை எடுத்து தமது விசுவாசிகளைத் தலைமை பதவிகளுக்கு நியமித்ததுடன், கட்சியின் விசுவாசிகளை, தமிழ்த் தேசிய உணர்வாளர்களைத் தமிழரசுக் கட்சியிலிருந்து வெளியேற்றியும் இடைநிறுத்தியும் முடிவுகளை அறிவித்தது.

கடந்த தேர்தலில் தமிழரசுக் கட்சியிலிருந்து விலகி, வேறு கட்சிகள் அல்லது சுயேச்சைக் குழுக்கள் ஊடாக தேர்தலில் போட்டியிட்டவர்கள் கட்சியிலிருந்து உடனடியாக நீக்கப்பட்டனர். அதேவேளை, கட்சியின் மத்தியக் குழு உறுப்பினரான வைத்தியர் சிவமோகன் மீது தேர்தல் காலங்களில் கட்சியினுடைய வேட்பாளர்களை நேரடியாகத் தாக்கி ஊடக சந்திப்புக்களை நடத்தியமை உட்பட பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு அவரும் கட்சியிலிருந்து இடை நிறுத்தப்பட்டார்.

அதுமட்டுமன்றி, நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்மக்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள், தமிழ் தேசியக் கட்சிகளின் வேண்டுகோளை ஏற்று பொது வேட்பாளராகப் போட்டியிட்ட தமிழரசுக் கட்சியின் மத்தியக் குழு உறுப்பினரான அரியநேத்திரன் ஏற்கெனவே இடை நிறுத்தப்பட்டிருக்கும் நிலையில், அவரையும் கட்சியிலிருந்து விலக்கும் என்ற பிரேரணையும் முன்வைக்கப்பட்டது.

> **இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து நான் விலகவில்லை. அதன் பிரகாரம் கட்சியின் தலைமைப் பதவியில் நானே தலைவராகத் தொடர்கின்றேன். ஆகவே, தலைமைப் பதவி தொடர்பில் வாக்கெடுப்பொன்றை நடத்தவேண்டிய அவசியமில்லை என்று மாவை சேனாதிராஜா கட்சியின் பதில் பொதுச்செயலாளர் வைத்தியர் ப.சத்தியலிங்கத்துக்கு கடிதம் மூலம் அறிவித்திருந்தார்**

அத்துடன், ஜனாதிபதித் தேர்தலில் கட்சியின் முடிவுக்கு மாறாகத் தமிழ் பொது வேட்பாளரை ஆதரித்தவர்கள், கட்சியின் முடிவுகளுக்கு மாறாக ஜனாதிபதித் தேர்தலில் பிரசாரம் செய்தவர்கள், பாராளுமன்றத் தேர்தலில் வேறு கட்சிகள் மற்றும் குழுக்களுக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்தவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதெனவும் இந்தக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்களும் மத்தியக் குழு உறுப்பினர்களும் தமிழ்த் தேசிய உணர்வாளர்களும் நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் வேட்பு மனு வழங்க சுமந்திரன் அணி கடும் எதிர்ப்புத் தெரிவித்தும் பல்வேறு அழுத்தங்களினால் வேட்புமனுவை வழங்கி விட்டு இவ்விருவரையும் தோற்கடிக்க உள்வீட்டுச் சதி முன்னெடுக்கப்பட்ட போதும் வெற்றியீட்டியவர்களான சிறீதரன் சிறிநேசன் ஆகியோரின் எம்.பி. பதவிகளை இலக்கு வைத்தே இவ்வாறான தீர்மானம் சுமந்திரன் அணியினால் நிறைவேற்றப்பட்டது.


எனவே, விரைவில் சிறீதரன், சிறிநேசன் ஆகிய எம்.பிக்கள் மீது ஜனாதிபதி தேர்தலில் கட்சியின் தீர்மானத்தை மீறி தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்த குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு இவ்விருவரினதும் குறிப்பாக யாழ். மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சிறீதரனின் எம்.பி. பதவி பறிக்கப்பட்டு யாழ். மாவட்டத்தில் போட்டியிட்டுத் தோற்ற 'மேதாவி' ஒருவர் மீண்டும் எம்.பியாகும் திட்டங்கள் உள்ளதாகவும் உள் 'வீட்டு' தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த திட்டத்திற்கு எதிர்ப்பு வந்து விடக்கூடாது என்பதற்காகவே தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவியிலிருந்து மாவை சேனாதிராஜா நீக்கப்படு அவர் இலங்கை தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு தலைவராக நியமிக்கப்பட்டதுடன், கட்சியின் அடுத்த கூட்டம் வரையில் பதில் தலைவராக சுமந்திரன் அணி விசுவாசியான சி.வி.கே.சிவஞானம் நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், ஏற்கெனவே கட்சியின் பாராளுமன்றக் குழுவின் பேச்சாளராகவும் கட்சியின் பேச்சாளராகவும் சிறிநேசன் நியமிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், தமிழரசுக் கட்சியின் உத்தியோகபூர்வ பேச்சாளராக மீண்டும் சுமந்திரன் பொறுப்பேற்றுக்கொண்டார்

இந்த அனைத்து தீர்மானங்களும் சர்வாதிகாரத்தனமாக எடுக்கப்பட்டிருந்தாலும், கட்சியின் பேச்சாளராக நியமிக்கப்பட்ட சுமந்திரனால் இத்தீர்மானங்கள் ஏகமனதாக எடுக்கப்பட்டதாகவே ஊடகங்களுக்கு அறிவிக்கப்பட்டது. ஏனெனில், கட்சியின் மத்தியக் குழுவிலுள்ள 46 பேரில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் மாவை சேனாதிராஜா-சிறீதரனுக்கு ஆதரவாகவே இருந்த நிலையில், இவ்வகையான தீர்மானங்கள் எடுக்க ஏகமானதான அங்கீகாரம் கிடைத்திருக்காது.

இவ்வாறு தமிழரசுக் கட்சிக்குள் சுமந்திரன் அணி திட்டமிட்டு முன்னெடுத்துவரும் நடவடிக்கைகள் தமிழரசுக் கட்சியின் எதிர்காலத்துக்கு மட்டுமல்ல, சிறீதரனின் அரசியல் எதிர்காலத்துக்கும் ஆப்பு வைப்பதாகவே உள்ளது.



## வாழ்வியல் தரிசனம்

பிரபஞ்சம் முழுமையாகப் பிரகாசிக்க, ஒவ்வொருவரின் உள்ளத்திலும் முழு உலகையும் அரவணைக்கும் அன்பு எனும் ஒளியைப் பாய்ச்ச முயற்சி செய்க! இது கடினமானது இல்லை.

புன்னகை செய்து, விழிகள் மூலம் கருணையுடன் நோக்குக! எதிரிகளே இல்லாத நிலையில், வாழ்ந்திட முயலுங்கள்.

இயன்றளவு சாதாரண உதவிகளைப் பிறருக்குச் செய்யத் தயங்க வேண்டாம். எக்காரணம் கொண்டும், சூடான சொற்பதங்களைப் பிரயோகிக்க வேண்டாம்.

தமக்குப் பிடிக்காததை, மற்றொருவருக்குக் கொடுப்பது, நாகரிகமானது அல்ல! தானம் செய்யும்போது கூட, கழித்துவிடும் பொருட்களை வழங்கலாகாது.

பசித்தோருக்கு இயன்றவரை வழங்குவது மேலானது. உடலுக்கு உணவு வழங்குதல், ஒருவரின் ஆன்மாவுக்கே ஆறுதல் அளிப்பது போலாகும்.

எவரையும் நிராகரிக்க வேண்டாம். எல்லோரும் எமக்கு வேண்டப்பட்டவர்கள். யாவரும் செய்யும் சிறு கொடைகள், முழு உலகையும் உயர்த்தும்.

நன்றி-பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்

### மக்கள் அவதி

அராலி பாலத்தில் இருந்து அராலி துறைக்குச் செல்லும் வீதியில் உள்ள மதகு ஒன்று பாரிய சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது.

குறித்த வீதியானது வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உரித்தான வீதியாகக் காணப்படுகிறது. அத்துடன், 789 வழித்தட பேருந்து பயணிக்கும் பிரதான வீதியாக இந்த வீதி காணப்படுகிறது.

கொக்கிரீட்டிலான தகடு உடைந்து, அதற்குள்ளே இருந்த போக்கும் உடைந்தே இந்த குழி தோன்றியுள்ளது.

இந்த வீதியால் அன்றாடம் 789 வழித்தட பயணிகள் சேவை பேருந்து பயணிப்பதுடன், வயோதிகர்கள், பாடசாலை மாணவர்கள், வேலைகளுக்குச் செல்வோர் என பல்லாயிரக்கணக்கானோர் பயன்படுத்தும் இந்த வீதியை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுத்துப் புனரமைத்துத் தர வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

- பு.கஜிந்தன்






# 25 ஆவது ஆண்டு விருது விழா...



பிரதம அதிதியாக கலந்துகொண்டவருக்கு நினைவுச் சின்னம் வழங்கிவைப்பு




வாழ்நாள் சாதனையாளர் விருதுகளை பெனட் ரூபசிங்க, சந்திரிக்கா விஜேசுந்தர, என். எம்.அமீன், ஸனிதா கரீம் மற்றும் அம்மையப்பாபிள்ளை யோகமூர்த்தி, ஆகியோர் பெற்றுக்கொண்டனர். (இடமிருந்து வலமாக)

பத்திரிகை ஆசிரியர் பேரவையும் இலங்கை பத்திரிகை நிறுவனமும் இணைந்து நடத்திய 2023ஆம் ஆண்டுக்கான சிறந்த ஊடகவியலாளர்களுக்கான விருதுகள் வழங்கும் விழா, கல்கிசை மவுண்லேவனியா ஹோட்டலில், செவ்வாய்க்கிழமை (07) இரவு நடைபெற்றது. 25ஆவது ஆண்டு விழாவில் விருது பெற்றவர்கள்



Cartoonis Awantha Artigala - Sunday Lankedeepa



Cartoonist Namal Amarasinghe - Tamil Mirror



Best Designed Newspaper Asitha Rathnayake - Sunday Times



Subramaniam Chettiar Award Kamanthi Wickramasinghe-Daily Mirror



Best Designed Newspaper : Deshaya (Sinhala)



Best Health Care & Medical Reporter -Nadia Fazlulhaq -Sunday Times



Business & Finance Journalist Sarma Swaminathan - Virakesari ( Tamil )



B. A. Siriwardena Columnist -S. Sivakumaran - Virakesari (Tamil)



B. A. Siriwardena Columnist: Shirley Anil De Silva (Lankadeepa Daily) (Sinhala)



Prof. Kailasapathy Award Namini Nimilamalee Wijedasa (Sunday Times)



Upali Wijewardene Feature Writer Hassthani Radhakrishnan- Virakesari (Tamil)



Prof. Kailasapathy Award A.A.M. Rifthi Ali - Thamilan (Tamil) (Merit)



Prof. Kailasapathy Award: Karuppaiya Prasannakumar - Thinakkural (Tamil)



Best Environmental Reporter- R. Ramkumar - Virakesari (Tamil)



Best Health Care & Medical Reporter: Fathima Husna -Thinakkural (Tamil) (Merit)



Designed Newspaper of the Year Virakesari (Tamil) (Merit)



Best Health Care & Medical Reporter Mohammed Marlin - Thinakaran (Tamil)



Sports Journalists (Tamil) SM.S. Mohamed Firdous - Thinakaran



Best Designed Newspaper - (Tamil) Thinakkural) (Merit)



Mervyn De Silva Journalist: I. Robert Antony - (Virakesari)(Merit)



Best Designed News Website: virakesari.lk (Tamil)



Mervyn De Silva Journalist of the Year- Sulochana Ramiah Mohan (Ceylon Today)



Best Designed News Website dailymirror.lk (English) (Merit)



Best Video Story-telling LOGESWARAN SELVARAJA -VIRAKESARI DIGITAL (Tamil) (Merit)




Best Designed News Website - ft.lk (English)



Best Designed News Website- lankadeepa.lk (Sinhala)



Best Designed News Website thamilan.lk (Tamil) (Merit)



Best Video Story-telling Winner: VIRAKESARI DIGITAL (Tamil) (Merit)




Denzil Peiris Young Reporter: Senuka Thiyasara Jayakody (Sunday Times)

அமெரிக்கா

## கலிபோர்னியாவில் காட்டுத்தீ:

# 30 ஆயிரம் பேர் வெளியேற்றம்

அமெரிக்காவின் தெற்கு கலிபோர்னியாவில், செவ்வாய்க்கிழமை (7) இரவு ஏற்பட்ட காட்டுத்தீ காரணமாக சுமார் 30 ஆயிரம் பேர் வெளியேற்றப்பட்டுள்ளதாக அந்நாட்டுத் தீயணைப்புத்துறை தெரிவித்துள்ளது.

இந்த காட்டுத்தீ லாஸ் ஏஞ்சல்சின் மலைப்பகுதிகளுக்கு வேகமாக பரவி வருகிறது. இதனால் அங்கு கடும் புகைமூட்டம் நிலவி வருகிறது. ஏராளமான வீடுகள், வாகனங்கள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன. காட்டுத்தீயை அணைக்க தீயணைப்பு வீரர்கள் கடுமையாக போராடி வருகிறார்கள்.

ஹெலிகொப்டர்கள் மூலம் தண்ணீர் ஊற்றப்பட்டு வருகிறது. 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகளில் வசித்துவந்த 26 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தீயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், சுமார் 30 ஆயிரம் பேர் வெளியேற்றப்பட்டுள்ளதாகவும், அந்நாட்டுத் தீயணைப்புத்துறை தெரிவித்துள்ளது.

இதையடுத்து,மக்கள் தங்களது வாகனங்களை ஆங்காங்கே நிறுத்தி விட்டு வேறு இடங்களுக்குக் குடிபெயர்ந்து வருகின்றனர்.

காற்றின் வேகம் அதிகமாக இருப்பதால், தீ பரவல் வேகமாகப் பரவி வருகிறது. இதனால் தீயைக் கட்டுப்படுத்துவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. லாஸ் ஏஞ்சல்ஸ் - கவுண்டியில், 46 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் மின்சாரம் இல்லாமல் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து கலிபோர்னியா ஆளுநர் கவின் நியூசோம் கூறுகையில்,

"காட்டுத்தீயில் பல கட்டமைப்புகள் அழிந்துள்ளன. ஆனால் சரியான எண்ணிக்கை கொடுக்கப்படவில்லை. 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் மற்றும் 13 ஆயிரம் கட்டிடங்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்" என்றார்.

புதன்கிழமை (8) இரவு, காற்றின் வேகம் மேலும் அதிகரிக்கும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதனால் காட்டுத்தீ இன்னும் வேகமாக பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.



# இலங்கைக்கெதிரான தொடரைக் கைப்பற்றிய நியூசிலாந்து

இலங்கைக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரை நியூசிலாந்து கைப்பற்றியது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் ஏற்கெனவே வென்ற நியூசிலாந்து, ஹமில்டனில் புதன்கிழமை (08) நடைபெற்ற இரண்டாவது போட்டியையும் வென்றமையைத் தொடர்ந்தே இன்னுமொரு போட்டி மீதமிருக்கையிலேயே தொடரைக் கைப்பற்றியது.

மழை காரணமாக 37 ஓவர்கள் கொண்டதாக அமைந்த இப்போடியின் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கையணியின் தலைவர் சரித் அசலங்க, நியூசிலாந்தை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து, றஷின் றவீந்திரவின் 79 (63), மார்க் சப்மனின் 62 (52), டரைல் மிற்செல்லின் 38 (38) ஓட் டங்களோடு 37 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 255 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில். மகேஷ் தீக்ஷன ஹட்-ட்ரிக் உள்ளடங்கலாக 4, வனிது ஹசரங்க 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.


பதிலுக்கு 37 ஓவர்களில் 256 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை, ஜேக்கப் டஃபி (2), மற் ஹென்றி, நாதன் ஸ்மித், அணித்தலைவர் மிற்செல் சான்ட்னெர், வில்லியம் ஒருர்க்கிடம் (3) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 30.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 142 ஓட்டங்களையே பெற்று 113 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில் கமிந்து மெண்டிஸ் 64 (66) ஓட்டங்களைப் பெற்றார்.

இப்போட்டியின் நாயகனாக றவீந்திர தெரிவானார்.

சீனா

## நிலநடுக்கத்தின் எதிரொலி:

# எவரெஸ்ட் சிகரத்தில் ஏற தடை



எவரெஸ்ட் சிகரத்தில் ஏற சுற்றுலாப் பயணிகளுக்குத் தடை விதித்து, சீன அரசு உத்தரவிட்டுள்ளது.

சீனாவின் ஒரு பகுதியாக உள்ள திபெத்தில், நேபாள எல்லையையொட்டி செவ்வாய்க்கிழமை (7) ரிச்டர் 6.8 அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கம் காரணமாக உலகின் மிக உயரமான சிகரமாக விளங்கும் எவரெஸ்ட் சிகரத்தின் அடித்தள முகாம் அமைந்திருக்கும் திங்ரி பகுதியிலும் நில அதிர்வு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கத்தால், திங்ரி முகாமில் இருந்த சுற்றுலாப் பயணிகள் மற்றும் சுற்றுலா வழிகாட்டிகள் ஆகியோருக்கு பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை எனவும், அனைவரும் தற்போது பாதுகாப்பாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே சமயம், திங்ரியில் அமைந்துள்ள சீன அறிவியல் அகாடமியின் வளிமண்டல மற்றும் சுற்றுச்சூழல் ஆராய்ச்சி நிலையத்தில் நிலநடுக்கத்தால் சிறிது நேரம் மின்தடை ஏற்பட்டதாகவும், அதுதவிர வேறு சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை என்றும் தகவல் வெளியாகியுள்ளது.


இந்த நிலையில், நிலநடுக்கத்தைத் தொடர்ந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, எவரெஸ்ட் சிகரத்தில் ஏற சுற்றுலாப் பயணிகளுக்குத் தடை விதித்து சீன அரசு உத்தரவிட்டுள்ளது.

அமெரிக்கா

# ஹமாசஸூக்கு ட்ரம்ப் கெடு

ஜனவரி 20ஆம் திகதிக்குள் பணய கைதிகள் அனைவரையும் விடுதலை செய்யவேண்டுமென, ஹமாஸூக்கு ட்ரம்ப் கெடு விதித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப், ஜனவரி 20ஆம் திகதி பதவியேற்க உள்ளார். அவர் ஜனாதிபதியாகப் பதவியேற்கும் முன் இஸ்ரேல் , ஹமாஸ் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டு பணய கைதிகள் மீட்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.



இந்நிலையில், 20ஆம் திகதிக்குள் பணய கைதிகள் அனைவரையும் விடுதலை செய்யவேண்டுமென, ஹமாஸூக்கு டிரம்ப் கெடு விதித்துள்ளார்.

இது தொடர்பாக டொனால்ட் ட்ரம்ப் கூறுகையில்,

"20ஆம் திகதி நான் பதவியேற்கும் முன் ஹமாஸ் பணய கைதிகளை விடுதலை செய்யவேண்டும். பேச்சுவார்த்தை தொடர்பாக நான் எந்த பாதிப்பையும் ஏற்படுத்தவிரும்பவில்லை. ஆனால் பணய கைதிகள் விடுதலை செய்யப்படவில்லை என்றால், மத்திய கிழக்கில் நரகம் வெடிக்கும்" என்றார்.

சீனா

## திபெத்தில் நிலநடுக்கம்:

# உயிரிழந்தோரின் எண்ணிக்கை 126ஆக உயர்வு

சீனாவின் தன்னாட்சி பெற்ற மாகாணமான திபெத்தில், செவ்வாய்க்கிழமை (7) ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 126ஆக உயர்ந்துள்ளது.

அந்நாட்டின் ஷிகாட்சே நகரை மையமாகக் கொண்டு, செவ்வாய்க்கிழமை (7) காலை 9.05 மணிக்கு நிலநடுக்கம் ஏற்பட்டது.

இந்த நிலநடுக்கத்தில் 95 பேர் உயிரிழந்ததாக முதற்கட்ட தகவல் வெளியானது. அந்த எண்ணிக்கை தற்போது அதிகரித்துள்ளது. அதன்படி, நிலநடுக்கத்தில் 126 பேர் உயிரிழந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும், 188 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த நிலநடுக்கத்தைத் தொடர்ந்து மீட்புக்குழுவினர் காயமடைந்தவர்களை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

மேலும், நிலநடுக்கத்தில் கட்டிட இடிபாடுகளுக்குள் பலர் சிக்கி இருக்கலாம் என்பதால் மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

புதுடெல்லி

## புதுடெல்லி சட்டப்பேரவை தேர்தல்:

# பெப்.5இல் தேர்தல்



புதுடெல்லி சட்டமன்றத்தின் 70 தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக பெப்ரவரி 5ஆம் திகதி தேர்தல் நடைபெறும் என்றும் ஈரோடு கிழக்குத் தொகுதிக்கான இடைத்தேர்தலும் அதேநாளில் நடைபெறுகிறது எனவும் என இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

பெப்ரவரி 8ஆம் திகதி வாக்கு எண்ணிக்கை நடைபெறும்.

இது தொடர்பில் இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையர் ராஜீவ் குமார் கூறியதாவது,

"டெல்லி சட்டப்பேரவைக்கு மொத்தம் உள்ள 70 தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாகப் பெப்ரவரி 5ஆம் திகதி தேர்தல் நடைபெறவுள்ளது. இந்த தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் ஜனவரி 10ஆம் திகதி தொடங்கவுள்ளது.

வேட்பு மனுத் தாக்கல் செய்வதற்கான கடைசி திகதி ஜனவரி 17 ஆகும். வேட்பு மனுக்கள் மீதான பரிசீலனை ஜனவரி 18ஆம் திகதி நடைபெறும். வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறுவதற்கான கடைசி திகதி ஜனவரி 20 ஆகும். இதில் பதிவான வாக்குகள் பெப்ரவரி 8ஆம் திகதி எண்ணப்பட்டு முடிவு அறிவிக்கப்படும்" என தெரிவித்துள்ளார்.



## இங்கிலாந்து கால்பந்தாட்ட லீக் கிண்ணத் தொடர்:

# ஆர்சனலை வீழ்த்திய நியூகாசில்

இங்கிலாந்து கால்பந்தாட்ட லீக் கிண்ணத் தொடரில், ஆர்சனலின் மைதானத்தில் புதன்கிழமை(08) நடைபெற்ற அவ்வணியுடனான முதலாவது சுற்று அரையிறுதிப் போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் நியூகாசில் யுனைட்டெட் வென்றது.

நியூகாசில் சார்பாக அலெக்ஸான்டர் இஸாக், அந்தனி கோர்டன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

# டொட்டென்ஹாமில் தொடரும் சண்

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பரின் அணித்தலைவரான சண் ஹெயுங்-மின் குறைந்தது எதிர்வரும் 2026ஆம் ஆண்டு வரையிலாவது கழகத்தில் தொடரவுள்ளார்.

டொட்டென்ஹாமுடனான முன்களவீரரான சண்ணின் ஒப்பந்தமானது நடப்புப் பருவகாலத்துடன் முடிவடைகின்ற நிலையில் அவரது ஒப்பந்தத்திலுள்ள ஓராண்டு நீடிப்பை செவ்வாய்க்கிழமை(07) அக்கழகம் செயற்படுத்தியிருந்தது.

கடந்த 2015ஆம் ஆண்டு டொட்டென்ஹாமில் இணைந்த 32 வயதான சண், 431 போட்டிகளில் விளையாடி 169 கோல்களைப் பெற்றதோடு, 50 கோல்களைப் பெறுவதற்கு உதவியுள்ளார்.





# மெஸ்ஸி, சுவாரஸூடன் இணையும் நெய்மர்?

ஐக்கிய அமெரிக்க கால்பந்தாட்டக் கழகமான இன்டர் மியாமியில் தனது முன்னாள் ஸ்பானிய லா லிகா கழகமான பார்சிலோனாவின் சக வீரர்களான லியனல் மெஸ்ஸி, லூயிஸ் சுவாரஸூடன் மீள இணைவது சுவாரஸ்யத்துக்குரிய விடயமென பிரேஸிலின் முன்களவீரரான நெய்மர் தெரிவித்துள்ளதுடன், சவுதி அரேபியக் கழகமான அல்-ஹிலாலுடனான ஒப்பந்தம் முடிவடைகின்ற நிலையில் ஐக்கிய அமெரிக்காவுக்குச் செல்வதை மறுக்கவில்லை.

பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனிலிருந்து அல்-ஹிலாலில் 2023ஆம் ஆண்டு இணைந்த பின்னர் காயங்கள் காரணமாக ஏழு போட்டிகளில் மாத்திரமே 32 வயதான விளையாடியிருந்தார்.

இதேவேளை எதிர்வரும் 2026ஆம் ஆண்டு சர்வதேச கால்பந்தாட்டச் சம்மேளன உலகக் கிண்ணத் தொடரே தனது இறுதி உலகக் கிண்ணம் என நெய்மர் தெரிவித்துள்ளார்.

# பிரான்ஸ் பயிற்சியாளர் பதவியிலிருந்து விலகும் டிஷம்ஸ்



பிரான்ஸ் தேசிய கால்பந்தாட்ட அணியின் நீண்ட காலம் பயிற்றுவிப்பாளராக இருக்கும் டிடியன் டிஷம்ஸின் ஒப்பந்தத்தை புதுப்பிக்க அவர் எதிர்பார்க்கவில்லையென அந்நாட்டு கால்பந்தாட்ட சம்மேளனம் செவ்வாய்க்கிழமை (07) தெரிவித்துள்ளது.

கடந்த 2012இல் பயிற்சியாளராகப் பொறுப்பேற்ற டிஷம்ஸின் ஒப்பந்தமானது எதிர்வரும் 2026இல் சர்வதேச கால்பந்தாட்டச் சம்மேளன உலகக் கிண்ணத் தொடருடன் முடிவடைகின்றமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 2018இல் உலகக் கிண்ணத்தைப் பெற்றுக் கொடுத்த டிஷம்ஸ், 2022இல் இறுதிப் போட்டி வரையில் அழைத்துச் சென்றிருந்தார். தவிர, 2021இல் ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் பட்டத்தையும் பெற்றுக் கொடுத்திருந்தார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 09, ஜனவரி 2025, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.